# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## (18.04.2015 முதல் 22.04.2015)

***அறிக்கை எண் 29/2015*** ***தேதி: 17.04.2015***

***மாநிலத்தின் கடந்த வார வானிலை***

*தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 29°செ முதல் 39°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 16°செ முதல் 18°செஆகவும், இரவுநேர வெப்பநிலை 9°செ முதல் 12°செஆகவும் பதிவானது. இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 27°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் மழை காணப்பட்டது.*

***எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு ( 18.04.2015 முதல் 22.04.2015)***

*வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32°செ முதல் 33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 75 முதல் 85 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 48 முதல் 55 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 6 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.*

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 18.04.15 | 4 | 32 | 23 | 7 | 85 | 55 | 6 | தென் மேற்கு |
| 19.04.15 | 2 | 32 | 23 | 7 | 85 | 55 | 6 | தெற்கு |
| 20.04.15 | 2 | 32 | 23 | 7 | 85 | 55 | 6 | தென் மேற்கு |
| 21.04.15 | 2 | 33 | 24 | 5 | 75 | 48 | 6 | தென் மேற்கு |
| 22.04.15 | 1 | 33 | 24 | 5 | 75 | 48 | 6 | தென் மேற்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ வானம் மேகமூட்டத்துடன் காணப்படுவதால் அனைத்து இறவை பயிர்களுக்கு அடியுரம் அளிப்பதை தவிர்க்கவும்.
- ✓ எதிர்பார்க்கப்படும் மழை மற்றும் கடந்த கால மண் ஈரப்பதத்தை கருத்தில் கொண்டு நீர் பாய்ச்சுவதை தடுக்கவும். மேலும் கோடை கால இறவை பருத்தி மற்றும் எள் பயிருக்கு போதிய வடிகால் வசதி ஏற்படுத்தவும்.
- ✓ மானாவாரி மற்றும் அறுவடை செய்த இறவை நிலங்களில் கோடை உழவு செய்வதை தொடர்ந்து மேற்கொள்ளவும்.
- ✓ காற்றின் ஈரப்பதம் அதிகமாக எதிர்பார்க்கப்படுவதால் இறவை கம்பு பயிர்களில் நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே அதற்கேற்றவாறு தற்காப்பு நடவடிக்கைளை மேற்கொள்ளவும்.
- ✓ தொடர்ந்து ஈரப்பதமான வானிலை நிலவுவதால் 160 நாட்களான கோடை கால இறவை பருத்தியின் ரகங்கள் மற்றும் வீரிய ஒட்டு ரகங்களில் 15 வது கனுவின் நுனியை கிள்ளி விடவும். மேலும் 160 நாட்களுக்கு மேலான ரகங்கள் மற்றும் வீரிய ஒட்டு ரகங்களில் 20 வது கனுவின் நுனியை கிள்ளி விடவும்.
- ✓ கால்நடை மற்றும் கோழிகளில் ஏற்படும் கழிசல் நோயை கட்டுப்படுத்த ஈரப்பதமற்ற தீவனங்களை கொடுக்கவேண்டும்.

**குறுஞ்செய்தி**

- ✓ கால்நடை மற்றும் கோழிகளில் ஏற்படும் கழிசல் நோயை கட்டுப்படுத்த ஈரப்பதமற்ற தீவனங்களை கொடுக்கவேண்டும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**